**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 2.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. சுரேஷ். | ஜாதி | |
| தந்தை பெயர் | காமாட்சி. | தொழில் | தனியார் நிறுவனத்தில் வேலை. |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 41/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**<u>அரசுத் தரப்பு முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, தனியார் கோழிப் பண்ணையில் மேற்பார்வையாளராகப் பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 என் மனைவி. ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். நான், எனது மனைவி ரேவதி, என் அப்பா காமாட்சி, என் அம்மா ஜெயலெட்சுமி மற்றும் எனது குழந்தை நிலாவுடன் வெள்ளையன் தெரு, அல்லிநகரத்தில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம். எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வரும் பாதையில் சுவர் எழுப்பியிருந்தார்கள். இது சம்பந்தமாக, நகராட்சியிலும், மாவட்ட கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் கொடுத்திருந்தோம். இது சம்பந்தமாக கடந்த 20.04.2018 ஆம் தேதியில், நகராட்சியிலிருந்து வந்து, அளவீடு செய்துவிட்டு, சுவரை இடித்துவிட்டார்கள். அதற்கு நாங்கள்தான் காரணம் என்று, முன்விரோதத்தை மனதில் வைத்துக்கொண்டு நானும், என் அப்பா காமாட்சியும் வீட்டில் இல்லாத சமயத்தில், இரவு 08.00 மணிக்கு எதிரிகள் இருவரும் கற்களை எடுத்துக்கொண்டு, என் மனைவியையும், என் அம்மாவையும் தாக்க முற்பட்டதாகவும், வீட்டின் கதவை என் அம்மாவும், என் மனைவியும் அடைத்துக் கொண்டதால், மேற்படி கல் கதவில் பட்டு, கதவு உடைந்துவிட்டது.என் அம்மாவும், என் மனைவியும் பாதுகாப்பிற்காக கதவை அடைத்துக்கொண்டதாகவும், எதிரிகள் இருவரும், தங்களை தாக்க வருவதாகவும்

எனக்குப் போன் செய்து கூறினார்கள். அன்றைய தினம் 08.30 மணியளவில் நான் வீட்டிற்கு வந்து சம்பவம் குறித்து விசாரித்து, அல்லிநகரம் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அதுசம்பந்தமாக, மறுநாள் அல்லிநகரம் காவல் நிலையத்திலிருந்து வந்து அக்கம் பக்கம் வந்து விசாரித்தார்கள். கடந்த 24.04.2018 ஆம் தேதியன்று, எங்களை அழைத்து எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாக போலீசார் தெரிவித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:**

சம்பவம் நடந்தபோது, நான் எங்கிருந்தேன் என்றால், தேனியில் இருந்தேன். சம்பவம் குறித்து என் மனைவியைத் தவிர வேறு யாரும் எனக்குத் தகவல் சொல்லவில்லை என்றால், சரிதான். சம்பவம் குறித்து எத்தனை மணிக்குப் புகார் கொடுத்தோம் என்றால், இரவு 09.00 மணிக்கு மேல் சென்றேன். அ.சா.ஆ.1 புகாரை யார் எழுதியது என்றால், நான்தான் எழுதினேன். அதில் நான் சாட்சிக் கையொப்பம் செய்துள்ளேனா? என்றால், ஞாபகமில்லை. எதிரிகளுக்கும், எங்களுக்கும் இடையே இருந்த நிலப் பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு, எதிரிகள்மீது பொய்யாக இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரியல்ல. நான் சொன்னதுபோல், சொன்ன தேதியில், சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால், ஊர்ப் பெரியோர்கள் எனக்குத் தகவல் தெரிவித்திருப்பார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் இருவரும், என் மனைவியையும், என் அம்மாவையும் பார்த்து, அசிங்கமாகப் பேசி, கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.16 20:51:35 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**